# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# எரேமியா
# (கண்ணீர் நாயகன்)



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Jonathan Hay

தழுவியவர்: Mary-Anne S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

யூதேயா தேசத்தில், ஒரு இறைப்பற்றுள்ள குடும்பத்தில் பிறந்தவன் எரேமியா.  அவனுடைய தந்தை இலக்கியா, ஒரு ஆசாரியன். ஆனதோத் என்ற ஊரிலே அவர்களுடைய குடும்பம் வாழ்ந்து வந்தது.  அது எருசலேமிலிருந்து வெகு தூரத்திலே இல்லை. ஒருவேளை எரேமியாவின் பெற்றோர் அவனும் ஒரு ஆசாரியனாக வருவான் என்று நினைத்திருக்கலாம்.  ஆனால் தேவனிடத்தில் வேறே திட்டம் இருந்தது.





எரேமியா பிறந்த நாட்களில், தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய வார்த்தையின் படி ஜீவிக்கவில்லை. ஏறக்குறைய எல்லோரும், அரசன் முதல் சாதாரண மனிதன் வரை, தவறான தேவர்களை வழிபட்டதுமல்லாமல், தேவனுடைய பரிசுத்த தேவாலயத்திலும் அவ்வாறு செய்தார்கள்.

எரேமியா
சிறு
பையனாக
இருக்கும்
போது,
தேவன்
அவனுடன்
பேசினார்.
"நீ பிறக்கும்
முன்பாகவே
உன்னை நான்
அறிந்திருக்கிறேன்,
அப்போதே நீ எனக்காக
பேச வேண்டுமென நான் திட்டமிட்டிருக்கிறேன்,"
என்று தேவன் எரேமியாவிடம் சொன்னார்.



தேவனுடைய அழைப்பு எரேமியாவுக்கு ஒரு திகிலை கொடுத்தது போல் இருந்தது. "ஆ, ஆண்டவராகிய தேவனே!" என்று அவன் அழுதான். "என்னால் பேச முடியாது, நான் ஒரு குழந்தை," அவன் குழந்தையை விட சற்றும் பெரியவனாக இருந்தான் - அப்போது அவனுக்கு வயது இருபது.



தன்னைச் சுற்றிலும் துன்மார்க்கத்தை பார்க்கும் போது அதற்கு எதிராக தேவனுக்காக பேச முடியுமா என்று எரேமியாவால் அப்போது யோசித்து பார்க்க முடியவில்லை.



"நீ பயப்படாதே"
என்று தேவன்
எரேமியாவை
உறுதி
செய்தார்.



"நான்
அனுப்புகிற
இடத்திற்கெல்லாம்
நீ போ.  நான் உனக்கு
சொல்வதையெல்லாம்
நீ சொல்.  நான் உன்னோடு
இருந்து நான் உன்னை
விடுவிப்பேன்."

பின்பு தேவன் ஒரு விசேஷமான காரியத்தை செய்தார். தேவன் எரேமியாவின் நாவை தொட்டார்.



எரேமியாவிற்கு தேவன் பலத்தையும், தைரியத்தையும் மற்றும் ஞானத்தையும் கொடுத்தார். அவன் தைரியமாக பேச ஆரம்பித்தான், தேவன் ஜனங்களை நேசிக்கிறார் மற்றும் உதவி செய்ய ஆயத்தமாய் இருக்கிறார் என்று ஞாபகப்படுத்தினான்.



ஆனால் யாரும் அவனுடைய பேச்சை கேட்கவில்லை. ராஜாகூட கேட்கவில்லை.

ஆசாரியர்கள் கூட கோபப்பட்டு தேவனைப் பற்றி பேசுவதை நிறுத்து என்று அவனிடம் சொன்னார்கள். அங்கு அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். அவர்கள் எரேமியா உண்மையைக் கூறவில்லை என்றார்கள்.



சுமார் நூறு வருடங்களுக்கு முன்னால் வடநாடான இஸ்ரவேல் தேவனை விட்டுவிட்டார்கள் என்று எரேமியா ஜனங்களுக்கு ஞாபகப்படுத்தினான். அவர்களுடைய பகைஞர்களான அசீரியர்கள், அவர்கள் மேல் வெற்றி கொண்டதுமல்லாமல் இஸ்ரவேலரை தூர தேசத்திற்கு இடமாற்றம் செய்தார்கள்.







இப்போது
யூதேயா ஜனங்கள்,
தென் நாட்டவர்கள்,
தேவனை
விட்டுவிட்டார்கள்.
அவர்களை
எதிர்க்கும் படையானது
ஏற்கெனவே
அடியெடுத்து வந்து
கொண்டிருக்கிறது.



தன்னுடைய
ஜனங்களின்
மேல் வெற்றியைக்
கொடுத்து மற்றும்
அவர்களையும்
சிறையிருப்புக்கு
எடுத்து
செல்வாரா?

ஜனங்களோ தங்களுடைய விக்கிரங்களை நம்பினார்கள். அவர்களுடைய விக்கிரகங்கள் அவர்களை சத்துருக்களிடமிருந்து காப்பாற்றுமா? ஜனங்கள் எரேமியாவின் மேல் மிக அதிகமாக கோபப்பட்டு, அவனை கொலை செய்ய திட்டம் தீட்டினார்கள். ஆனால் தேவனோ தன்னுடைய ஊழியக்காரனை பாதுகாத்தார்.



கடைசியாக, தேவன் சொல்லிய ஒரு காரியம் எரேமியாவை அதிர்ச்சியடைய செய்தது.  தேவன் சொன்னார், "இந்த ஜனங்களுக்காக நீ விண்ணப்பம் பண்ணாதே.  தங்களுக்கு உதவி வேண்டுமென அவர்கள் என்னை நோக்கி முறையிடும் போது நான் கேட்க மாட்டேன்."



பாபிலோனுடன் உள்ள யுத்தத்திலே தோற்றுப் போவீர்கள் என்று எரேமியா ராஜாவை எச்சரித்தான். ராஜா கோபப்பட்டு எரேமியாவை சிறைச்சாலையிலே போடுவித்தான். சிறையில் கூட எரேமியா தொடர்ந்து பிரசங்கம் பண்ணிக் கொண்டு மற்றும் தேவனில் நம்பிக்கையுடன் இருந்தான்.



எரேமியா சிறைச்சாலையிலிருந்து வெளியே வந்த உடன் மறுபடியுமாக அவர்கள் தேவனிடத்திற்கு திரும்பி அவரில் நம்பிக்கை வைக்க வேண்டுமென ராஜாவுக்கும், ஜனத்திற்கும் பிரசங்கம் பண்ணினான்.



இந்த முறை, ராஜா எரேமியாவை சேறு நிறைந்த ஆழமான குழியிலே போடுவித்தான்.

ஆனால் தேவனோ ராஜாவினுடைய இருதயத்தில் கிரியை செய்தார். இரகசியமாக அவன் எரேமியாவை காப்பாற்றி ராஜா என்ன செய்யவேண்டுமென தேவன் விரும்புகிறார் என்று அவனிடம் கேட்டான். "சிறையிருப்புக்குச் செல்லுங்கள், நீங்கள் ஜீவிப்பீர்கள் என்று தேவன் சொல்லுகிறார்," என்பது எரேமியாவின் பதிலாயிருந்தது.



பாபிலோனின் படை எருசலேமின் மேலும் மற்றும் யூதா அனைத்தின் மேலும் வெற்றி பெற்றது. அவர்கள் கோட்டைகளையும் மற்றும் கட்டிடங்களையும் தரை மட்டமாக்கினார்கள், மற்றும் எல்லாவற்றையும் சுட்டெரித்து போட்டார்கள்.



தேவனுடைய ஜனங்கள் எழுபது வருடம் சிறையிருப்புக்குச் செல்வார்கள் என்றும் பின்பு அவர்களை வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்கு திரும்ப அழைத்து வருவேன் என்றும் தேவன் சொன்னார்.



எரேமியா (கண்ணீர் நாயகன்)

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

எரேமியா

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

28

60

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16